# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com




2016 ஆம் ஆண்டின் கடைசி ஞாயிற்றுக்கிழமையில் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் மாலை ஆராதனைக்குப் பிறகு தலைமை ஆலயத்தில் சபையின் ஆண்டு நிறைவு பொதுக்குழு கூட்டத்தை நடத்தினார். அவர் ஏறக்குறைய 11,000க்கும் மேற்பட்ட கிளை மற்றும் ஒருங்கிணைந்த சபைகளின் அனைத்து மான்மின் அங்கத்தினர்களும் 2017ல் தேவன் தந்த நான்கு தரிசனங்களுக்காக ஜெபிக்கும்படி வலியுறுத்தினார்.

**தரிசனம் 1 : “மறுசிருஷ்டிப்பின் வல்லமை”**
**இந்த வல்லமை ஏற்கனவே சிருஷ்டிக்கப்பட்டவைகளை மாற்றவும் புதுப்பிக்கவும் கூடியது.**

“தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன்; வல்லமை தேவனுடையது என்பதே” (சங்கீதம் 62:11).

மனுக்குலம் இயற்கைச் சட்டங்களை மீறி சுற்றுச்சூழலை மாசு அடையச் செய்ததால் ஏற்படுகிற அசாதாரணமான தட்பவெட்பநிலை நிகழ்வுகள் மாற்றங்கள், வழக்கத்திற்கு மாறான சூழல்கள், இயற்கை பேரழிவுகள் போன்றவற்றை மறு சிருஷ்டிப்பின் வல்லமை பூரணமாக நிறைவேறும் பொழுது தட்பவெட்பநிலையை கட்டுப்படுத்தி தடுக்கலாம். அந்த வல்லமையானது மரித்த நரம்புகள் திசுக்களை மட்டுமல்ல, கூடுதலாக பாவங்களினால் சீர்கெட்டு தீமையினால் கறைப்படிந்த மனிதர்களுடைய இருதயங்களை புதுப்பித்து, ஆவியின், நற்குணத்தின் இருதயங்களாக மாற்றவும்வல்லது. இந்த கடைசி நாட்களில் எண்ணற்ற ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் வழிநடத்தக்கூடிய ‘இரகசிய ஆயுதம்’தான் இந்த மறு சிருஷ்டிப்பின் வல்லமையாகும். அது ஆத்துமாக்களை புதிய எருசலேமிற்குள் வழிநடத்த விரும்புகிற தேவனுடைய பரிசாகும்.

**தரிசனம் 2 : “கொரிய சபைகளும் வெளிநாட்டு ஊழியங்களும்”**
**இந்த திருச்சபை எல்லா மக்களையும் இரட்சிப்புக்குள் வழிநடத்தும்.**

“எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் (தேவன்) சித்தமுள்ளவராயிருக்கிறார்” (1தீமோத்தேயு 2:4).

சமீபகாலமாக உலகமானது பாவங்கள் தீமைகளினால் கறைப்படிந்து கொண்டேயிருப்பதால், அநேக விசுவாசிகளும் கிறிஸ்தவ சமுதாயத்தில் இருக்கும் மக்களும்கூட சீரழிந்தவர்களாய் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகின்றனர். இது அநேக அவிசுவாசிகள் சபையை தவிர்ப்பதற்கான காரணமாகிவிட்டது. அந்திக்கிறிஸ்துவின் ஆதிக்கம் உலகளவில் அதிகரித்திருப்பதால் விசுவாசிகளும்கூட தேவனை விட்டு விலகுகின்றனர். எப்படியிருந்தாலும், கடைசி காலத்–திற்கான ஆயத்தமாக இந்த திருச்சபை ஒருவரும் மறுத்துப்பேச முடியாத வல்லமையான கிரியைகளான மனிதனுடைய இருதயங்களை மாற்றும் ஆவிக்குரிய வார்த்தை; ஒன்றிணைந்து வல்லமையான ஊழியத்தைச் செய்யக்கூடிய ஆவிக்குரிய யுத்தவீரர்கள்; ஊழியத்திற்கான பொருளாதார உதவிகள்; ஒருமனதோடு ஜெபிக்கிற கீழ்ப்படிதலின் விசுவாசிகள் போன்றவற்றை கொண்டிருக்கும்படி தேவன் ஆசீர்வதித்துள்ளார். உலகச் சூழ்நிலைகளின் மாற்றத்தின்படி குறிக்கப்பட்ட நேரமானது சமீபித்து வருவதால், நாம் இணைந்து கிறிஸ்தவ சமுதாயத்தையும் முழு உலகத்தையும் பரிசுத்த ஆவியானவரின் சுழல்காற்றினால் புதுப்பிக்கும்படிக்கு அதிகமாய் ஆயத்தப்படுவோம்.

**தரிசனம் 3 : “அழகான ஆலயம்”**
**அது விசுவாசிகளின் உண்மை இருதயத்தையும் பூரணமான விசுவாசத்தையும் காட்டுகிறது.**

“உன் நீதியை வெளிச்சத்தைப்போலவும், உன் நியாயத்தைப் பட்டப்பகலைப்போலவும் விளங்கப்பண்ணுவார்” (சங்கீதம் 37:6).

தேவன் விசுவாசிகள் முழு நிச்சயத்தோடு ஒரு உண்மையுள்ள இருதயத்தைப் பெற்று, உலகெங்கும் பிரகாசித்து, தங்கள் இருதயங்களின் ஆழத்திலிருந்து துதி ஆராதனையின் அழகான தூபத்தை ஏறெடுக்கும்படி விரும்புகிறார். அழகான நற்குண இருதயத்தைப் பெற்று, ஆண்டவரோடு ஒன்றாய் இணைந்த, தேவனை நேசிக்கிற, மேய்ப்பரை நம்புகிற விசுவாசிகளால் கானான் ஆலயமும் மிகப் பிரம்மாண்டமான ஆலயமும் கட்டப்படும். மற்றொரு வார்த்தையில் சொன்னால், தேவனைப் பிரியப்படுத்துகிற விசுவாசம் இருந்தால் மட்டுமே அவற்றை நிறைவேற்ற முடியும். குறிப்பாக உலகமெங்கிலும் தேவனுடைய மகத்துவத்தையும், மகிமையையும் காண்பிக்கக்கூடிய ஒரு முக்கியமான அடையாளச் சின்னமாக மிகப் பிரம்மாண்டமான ஆலயமானது கட்டப்படும். தேவன் அந்த ஆலயங்களை கட்டுவதன் மூலம் மிகப் பெரிதான அளவில் மகிமையடைவார்.

**தரிசனம் 4 : “மேய்ப்பரின் கனிகள்”**
**விசுவாசிகள் மேய்ப்பரோடு நம்பிக்கை மற்றும் அன்பில் ஒன்றிணைவார்கள்.**

“கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள். அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான்” (சங்கீதம் 37:6).

திருச்சபை ஆரம்பிக்கப்பட்டது முதற்கொண்டு, தேவன் பரலோக வாழ்விடங்களில் மிகச் சிறந்த இடமான புதிய எருசலேமின் மீதான நம்பிக்கையை மேய்ப்பர் மூலமாக விதைத்தார். 2010ம் ஆண்டு முதற்கொண்டு, உண்மையான பிள்ளைகளைப் பெறும் முனைப்போடு மேய்ப்பரின் தியாக விலைக்கிரயத்தின் மூலமாக தேவன் ஆவி மற்றும் பூரண ஆவியின் ஓட்டத்தை ஏற்படுத்தி தந்துள்ளார். மேலும் தேவன் கடந்த சில வருடங்களாக மேய்ப்பர் மீது கொண்டுள்ள ‘நம்பிக்கை’யை முக்கியப்படுத்தி, அன்பு மற்றும் நம்பிக்கையில் ஒன்றிணைந்து ‘மேய்ப்பரின் கனிகளாக’ மாறும்படி விரும்புகிறார். இது மேய்ப்பரின் மறு சிருஷ்டிப்பின் வல்லமை யின் உதவியின்மூலமாக சாத்தியப்படுகிறது. மேய்ப்பரின் கண்ணீர் தியாகத்தை சாட்சியாக காணும்போது, மக்கள் தேவனுடைய ஆண்டவருடைய அன்பை நம்ப முடியும். ஆவிக்குரிய பூரண ஆவிக்குரிய நபர்களாகவும் மாற முடியும்.

2017ல், மேய்ப்பரின் மறு சிருஷ்டிப்பின் வல்லமையின் மூலமாக தேவனுடைய உண்மையான பிள்ளைகளாக மாறி, எண்ணற்ற ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் வழிநடத்தக்கூடிய ஒரு முக்கியப் பங்காற்றுவீர்கள் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. அவர் அழகான பரலோகத்தில் உங்களுக்கு புகழ்ச்சியையும், கனத்தையும், மகிமையையும் தருவதற்காக ஆர்வத்தோடு காத்திருக்கிறார்.



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

# பாக்கியவான் (1)

"துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்... இருக்கிற மனுஷன் பாக்கியவான்."
(சங்கீதம் 1:1-2)

வெகுவாய் காத்திருந்த 2017 வந்துவிட்டது! மக்கள், ஆரோக்கியமானவர்களை, ஐசுவரியவான்களை, கனவான்களை, கல்விமான்களை பாக்கியவான் என்று அடிக்கடி சொல்வதுண்டு.

வாழ்வில் எத்தனை பாக்கியங்களைப் பெற்றாலும், ஒரு மனிதனால் தனது பாக்கியங்களை நித்தியமாக அனுபவிக்க முடியாமல் போகுமானால் அவைகள் மெய்யான பாக்கியங்கள் என்று சொல்ல முடியாது. அந்த பாக்கியங்கள் ஒவ்வொன்றும் ஒரே நாளில் கூட போய்விடக்கூடும். அவன் மரித்துப்போனால் அவனுடைய ஆஸ்திகள் அனைத்தும் மாயையாகி விடும். மேலும், ஒருவன் ஆண்டவரை விசுவாசிக்கவில்லையென்றால், அவன் நரகத்திற்குப் போய் விடுவான். அதனால் அவனுக்கு மிகப்பெரும் ஆஸ்தியிருந்தாலும் அவன் "பாக்கியவான்" என்று அழைக்கப்பட முடியாது.

அப்படியானால் பாக்கியவான் யார்? நமக்கு பாக்கியங்களை கொடுக்க விரும்பும் தேவனுக்கு முன்பாக ஆயத்தமாயிருக்கும்படிக்கு நாம் என்ன செய்ய வேண்டும்? நீங்கள் மெய்யாகவே பாக்கியவான்களாகி, செழிப்பான வாழ்வு வாழ்ந்து தேவனை மகிமைப்படுத்தும்படியாக நான் வாஞ்சிக்கிறேன்.

## 1. துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாதவர்கள்

துன்மார்க்கருடைய ஆலோசனை அவர்களது பாவச் சிந்தைகளை கட்டுப்படுத்தி ஆளுகிற சாத்தானிடத்திலிருந்து வருகிறது. உங்கள் இருதயங்களில் பாவசுபாவங்கள் இருக்குமேயானால், நீங்கள் உங்களுக்குள் மாம்சத்தின்படி யோசிப்பீர்கள். அதன்பின் பொல்லாத சிந்தனைகளில் மூழ்கிவிடுவீர்கள். துன்மார்க்கருடைய ஆலோசனை அப்பேர்பட்ட அவர்களது பாவசிந்தையிலிருந்து வருகிறது. அது தேவ சித்தத்திற்கு பகையாய் இருக்கிறது. இப்பேர்பட்ட துன்மார்க்க ஆலோசனையுள்ள மனிதன் தன் சுய ஆர்வமான ஆதாயத்திற்காக பிறரை வெறுப்பான், பகைப்பான் அல்லது தூஷிப்பான். அவன் துன்மார்க்கமான சதிகளை திட்டமிட்டு பிறரை தீமையாக நடத்துதல் அல்லது தனது சுய நோக்கத்திற்காக அவர்களை கொலை செய்தல் போன்ற தீமையான காரியங்களைச் செய்வான்.

எஸ்தரின் புத்தகத்திலுள்ள ஆமான் துன்மார்க்கருடைய ஆலோசனையை பின்பற்றியவர்களில் ஒரு உதாரணமானவனாவான். அவன் யூதனான மொர்தெகாய் தனக்கு முன் பணியாததால் அல்லது அவனை கனப்படுத்தாததால் மிகவும் கோபங்கொண்டான். மொர்தெகாய் உட்பட இராஜ்ஜியம் எங்குமுள்ள யூதர்கள் அனைவரையும் கொல்ல அவன் வகை தேடினான். ஆனால் தேவன் அந்தப் பொல்லாத மனுஷனது தீமையான சதி திட்டத்தை கவனித்து அவன் உண்டாக்கின சதிவலையிலே அவனே விழும்படி செய்தார். தேவனுடைய கிரியை மூலமாக அவனது தீமையான சதி திட்டம் ராஜாவுக்கு முன்பாக வெளிப்படுத்தப்பட்டது. ராஜாவுக்கு அது மிகுந்த கோபமூட்டியது. ராஜா தனது அதிகாரிகளை ஆமான் மொர்தெகாய்க்கு செய்த தூக்கு மரத்திலே அவனையே தூக்கிப் போடும்படி கட்டளையிட்டான்.

இந்த நிலை இன்றும் அதேபோலவே உள்ளது. துன்மார்க்கருடைய ஆலோசனை எப்போதும் அழிவையே கொண்டு வரும். அனுதின செய்தித்தாள்கள் தங்கள் சுய அந்தஸ்து மற்றும் ஆஸ்திக்காக தீமையான சதிதிட்டங்கள் செய்து தவறு செய்த துன்மார்க்க மனிதர்கள் பலரை குறித்து வெளியிடுகிறது. அவர்கள் இரகசியமாக துன்மார்க்கமான சதிதிட்டங்களை ஆயத்தம் செய்வார்கள், ஆனால் அவர்களது சதிதிட்டம் வெளியரங்கமாகிவிடும். அதனால் அவர்கள் தங்கள் அந்தஸ்தையும் ஆஸ்தியையும் இழந்துவிடுவார்கள். ஆனால் பரத்திலிருந்து வருகிற ஞானத்தால் நீங்கள் செழிப்பிற்கு நேராக வழிநடத்தப்படுவீர்கள்.

சில சமயங்களில் தேவனுடைய ஞானம் உலக மக்களுடைய பார்வையில் ஞானமற்றதைப் போல காணப்படும். அவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் வேலைச் செய்தால் அதிகமான பணம் சம்பாதித்து விடலாம் என நினைக்கிறார்கள். அவர்கள் பிறரை ஏமாற்றியும்கூட ஆதாயம் பெற முயற்சிக்கிறார்கள். தங்களைத்தான் இப்படி ஞானவான்கள் என நினைக்கிறார்கள். தேவ ஞானத்தில், விசுவாசிகளாகிய நாம் ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை பார்ப்பதில்லை. தேவனுக்கு முழு தசமபாகத்தையும் அபரிதமான காணிக்கைகளையும் கொடுக்கிறோம். தொழில் செய்வதிலும் நேர்மையாகவும் உண்மையாகவும் இருக்கிறோம். அதனால் நமக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் நாம் பிறரை ஏமாற்றவோ அல்லது அவர்களுக்கு சேதம் வருவிக்கவோ மாட்டோம்.

இப்படி நாம் சத்தியத்தில் நடந்தால், நாம் தேவனுடைய உதவியை பெறுவோம். அவருடைய ஆசீர்வாதத்தில் நாம் விதைத்தவைகளை அறுவடை செய்வோம்.

## 2. பாவிகளுடைய வழியில் நில்லாதவர்கள்

ரோமர் 6:23 சொல்கிறது, "பாவத்தின் சம்பளம் மரணம்." முதல் மனிதனாகிய ஆதாம் நித்திய ஜீவனை இழந்து மரணத்தின் வழியில் விழுந்ததற்கு காரணம் பாவமே. அவன் சாத்தானால் கட்டுப்படுத்தப்பட்ட சர்ப்பத்தினால் வஞ்சிக்கப்பட்டதால் வேதனையும் கண்ணீரும் நிறைந்த வாழ்வு வாழ ஆரம்பித்து, பாவிகளுடைய வழியில் நடக்கலானான். பாவிகளின் வழி நியாயத்தீர்ப்புக்கும் நித்திய மரணத்திற்கும் நேராக வழிநடத்தும். ஆகவே பாவிகளின் வழியில் நில்லாதவர்கள் பாக்கியவான்கள்.

பொதுவாக மக்கள் யாராவது தேசத்தின் அல்லது சமுதாயத்தின் சட்டத்தை மீறினாலேயே அவர்களை பாவியாக கருதுவார்கள். அவர்கள் இருதயத்தில் வெறுப்பு அல்லது கொலைச் செய்ய ஆசை கொண்டிருப்பவனை குற்றஞ்சாட்டமாட்டார்கள். அதேபோலவே, பேராசை கொண்டிருப்பவை அல்லது திருட ஆசை கொண்டிருப்பவனை செயலாக அவைகளை அவன் வெளிப்படுத்தாததால் அவர்கள் குற்றஞ்சாட்டமாட்டார்கள்.

ஆனால் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். உங்கள் இருதயத்தில் பகைமை, பொறாமை, வெறுப்பு, திருட்டு, விபசாரம், நியாயத்தீர்ப்பு மற்றும் தூஷித்தல் உட்பட தீமையான ஆசைகள் இருக்குமேயானால், தேவன் உங்களை "நீ ஒரு பாவி" என்பார். அவைகள் உங்கள் இருதயத்தில் கிளர்ச்சியடையும்போது தேவன் நீ ஏற்கனவே அப்படிப்பட்ட பாவங்கள் செய்து விட்டாய் எனவும், அவர் நம் இருதயத்தைப் பார்க்கிற காரணத்தால் நீ ஒரு பாவி என்பார்.

மேலும், நீங்கள் அப்பேர்பட்ட பாவங்களை செயலாக செய்வீர்களானால், நீங்கள் நிச்சயமாக தேவனுக்கு முன்பாக பயங்கரமான பாவியாக குற்றஞ்சாட்டப்படுவீர்கள் (கலாத்தியர் 5:19–21). 'ஆண்டவரே, நான் உம்மை விசுவாசிக்கிறேன்' என்று நீங்கள் அறிக்கைச் செய்தாலும் நீங்கள் தேவனுடைய சித்தத்தை பின்பற்றாமல் மாம்சத்தின் கிரியைகளை செய்தால் உங்களால் பரலோகத்தில் நுழைய முடியாது.

ஆனால் மக்கள் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு பாவம் செய்யாமல் இருக்க வேண்டும் என்று சொல்லப்படும்போது, அவர்களில் பலர், "நான் எப்படி வேதாகமத்தின் பல கற்பனைகளைக் கைக்கொள்ள முடியும்? அது எனக்கு மிக பாரமாக இருக்கிறது" என்று கூறி முறுமுறுப்பார்கள். ஆனால் ஒன்றை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவருடைய கற்பனைகள் கைக்கொள்ள பாரமானவைகள் அல்ல, மாறாக நீங்கள் ஒருவரை பகைக்கும்போது அல்லது வெறுக்கும்போது உங்களுக்கு வேதனையாயிருக்க வேண்டும். நீங்கள் பிறரை நேசிக்கும்போது அல்லது சேவிக்கும்போது நீங்கள் சமாதானமாயிருப்பீர்கள்.

தாவீதின் மேலுள்ள வெறுப்பினால் பகைமையினாலும் சவுல் தாவீதை துரத்துகையில் வேதனையாகவும் அசௌகரிகமாகவும் இருந்தான். அவன் தொடர்ந்து தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் சிங்காசனத்தை தவறவிடாமல் இருப்பதற்காக தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக தொடர்ந்து பாவம் செய்துகொண்டே இருந்தான். அவன் பாவியின் வழியில் நின்ற காரணத்தால், அவன் அசுத்த ஆவியினால் கஷ்டப்பட்டு பேரழிவுகளையும் வேதனைகளையும் சந்தித்தான். அவன் இறுதியாக தன் உயிரை யுத்தத்தில் பரிதாபகரமாக இழந்தான். இருப்பினும் சவுலால் தாவீது பயமுறுத்தப்பட்டபோது அவன், "கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன்" என்று தேவனைத் துதித்தான். அவன், "உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்" (சங்கீதம் 23) என்று அறிக்கைச் செய்து எப்போதும் தேவனைச் சார்ந்துகொண்டான்.

அவன் தேவனுடைய சத்தியத்தை பின்பற்றியபடியால் எப்போதும் அவன் மகிழ்ச்சியினாலும் சமாதானத்தினாலும் நிறைந்திருந்தான். நீங்கள் தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொண்டு பாவம் செய்யாமல் இருந்தால் உங்கள் இருதயம் உங்களை குற்றவாளியாக தீர்க்காததால் நீங்கள் அவருக்கு முன்பாக தைரியங்கொண்டிருக்கலாம். அப்போது நீங்கள் எப்போதும் சமாதானமும் சந்தோஷமும் கொண்டிருக்கலாம். நீங்கள் ஏதாகிலும் கஷ்டங்களை சந்தித்தால், தேவன் நீங்கள் தப்பிக்கொள்ளும் போக்கை உங்களுக்கு கொடுப்பார். உங்களுக்கு பாடுகள் சோதனைகள் நிகழாதவாறு நிறுத்திப் போடுவார்.

## 3. பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராதவர்கள்

தேவன் அகந்தையுள்ளவர்களை வெறுக்கிறார். அகந்தையுள்ள அடிக்கடி தேவனுக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிற மனிதர்கள் மதிப்பை இழந்து போவார்கள். ஏவாள் அவளது இருதயத்தில் அகந்தையாயிருந்த காரணத்தால் விலக்கப்பட்ட கனியை புசிக்கும்படி சோதிக்கப்பட்டாள். அவள், "நீங்கள் தேவர்களை போலாவீர்கள்" என்று சர்ப்பம் சொன்னபோது வஞ்சிக்கப்பட்டாள்.

அகந்தையுள்ளவர்கள் தங்களைத்தாங்களே உயர்த்துவார்கள், தங்கள் மதிப்புகளை குறித்து மேன்மைப் பாராட்டுவார்கள். அவர்கள் அவமானப்படுத்தப்பட்டதாக அல்லது அலட்சியப்படுத்தப்பட்டதாக உணரும்போது அவர்கள் மிகவும் வேதனைப்படுவார்கள். அவர்கள் சேவிக்கப்பட வேண்டும் என்று விரும்புவார்கள். இருப்பினும், தேவன் தங்களைத் தாங்கள் உயர்த்துகிற பெருமைபிடித்தவர்களை தாழ்த்திவிடுகிறார். ஆனால் தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார். தாழ்மையுள்ளவர்கள் தங்களைத் தாங்களே தாழ்த்துகிறபடியால் பிறரால் அவர்கள் பாராட்டப்பட்டு உயர்த்தப்படுகிறார்கள் (லூக்கா 14:11).

தேவனுடைய சாயலாக இயேசு இருந்தார். ஆனால் அவர் மாம்சமாகி அடிமையின் ரூபமெடுத்து இந்த உலகிற்கு இறங்கி வந்தார். மரணபரியந்தம் சிலுவை சுமந்தார். அவ்வாறு, அவர் உண்மையான சேவையின் நல்ல உதாரணத்தை காட்டியுள்ளார். நீங்களும் இயேசுவைப்போல உங்களைத் தாழ்த்தி பிறருக்குச் சேவை செய்யும்போது பூமியிலே மக்களால் மதிக்கப்படுவீர்கள். பரலோகத்திலும் மதிப்பு மிகுந்த மனிதராக அங்கீகரிக்கப்படுவீர்கள்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, மெய்யாகவே பாக்கியவானாவதற்கு, நாம் துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் இருக்க வேண்டும். நீங்கள் தேவனைச் சார்ந்து, நற்குணத்தில் நடந்து பிறருக்கு தாழ்மையாக சேவைச் செய்து பரலோகத்திலும் பூமியிலும் நித்திய மகிமையையும் கனத்தையும் நீங்கள் அனுபவிக்கும்படி ஆண்டவருடைய நாமத்தில் உங்களுக்காய் ஜெபிக்கிறேன்.

**விசுவாசத்தின் அறிக்கை**

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**
**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**
**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**
**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**
**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் (தேவன்)..." (அப். 17:25)
"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப். 4:12)

# நன்றி செலுத்துதல், ஆசீர்வாதத்தின் திறவுகோல்!

**தேவன் தம்முடைய அன்பான பிள்ளைகள் பூமியிலே ஆவியிலும் சரீரத்திலும் ஆசீர்வாதங்களைப் பெறவும் பரலோகத்தில் வெகுமதிகளைப் பெறவும் வேண்டும் என விரும்புகிறார். 2017ல், நாம் நன்றிசெலுத்துதல் மூலமாக அபரிதமான ஆசீர்வாதங்களையும் பதில்களையும் பெற்றனுபவிப்போம்.**

## நன்றி செலுத்துதல், தேவனிடத்திலிருந்து நாம் ஆசீர்வாதங்களை இழுத்துக்கொள்வதற்கான வழிப்பாதை

நாம் நல்ல சூழல்களை அனுபவிக்கும்போது, நாம் அனைவரும் தேவனுக்கு நன்றி செலுத்துவோம். ஆனால் நம்மால் நன்றியே செலுத்த முடியாத சூழ்நிலைகளிலும்கூட நம்மால் நன்றி செலுத்த முடிந்தால், அதுதான் விசுவாசத்தின் நிரூபணம். 1 தெசலோனிக்கேயர் 5:18 சொல்கிறதுபோல, எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செலுத்துவது என்பது தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிதலின் வெளிப்பாடாக உள்ளது.

மேலும் தேவனுடைய பிள்ளைகள் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிகிறதில் இந்த நன்றி செலுத்துதல் என்ற நிலையிலே மட்டும் தங்கிவிடக்கூடாது. நாம் இரட்சிக்கப்பட்டோம் என்ற இந்த ஒரு நிஜத்திற்காகவே, நம்மால் எல்லாவற்றிலும் நன்றி செலுத்த இயல வேண்டும். தேவனுடைய கிருபை இல்லாவிட்டால் நாம் நித்திய அக்கினியில் தள்ளப்பட்டு சதாகாலமும் கஷ்டப்படுவோம். இதைக் குறித்து யோசிக்கையில், நாம் இரட்சிக்கப்பட்டு அழகான பரலோகம் போய் சேர்வது என்பது எத்தனைப் பெரிய தேவ ஈவாக இருக்கிறதென்பதை நம்மால் புரிந்துக்கொள்ள முடிகிறது.

அடுத்ததாக, நன்றி செலுத்துதல் என்பது நாம் தேவ வார்த்தையில் வைத்துள்ள விசுவாசத்தின் வெளிப்பாடாக இருக்கிறது. மாற்கு 11:24 சொல்கிறது, “ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்கிறேன்.” நாம் தேவனை விசுவாசிப்பதால் இந்த வசனத்தை விசுவாசித்தால், உடனடியாக தற்போது பதில் வரவில்லை என்றாலும் நாம் சோர்ந்துபோக மாட்டோம். காரணம் மிகச் சிறந்த நேரத்தில் நாம் கேட்பவைகளுக்கு தேவன் மிகச் சிறந்த பதிலை தருவார் என்று விசுவாசிக்கிறோம். அப்போது, இயற்கைச் சூழ்நிலை அல்லது நிலவரங்கள் மிக மோசமாக சென்றாலும்கூட அது ஒரு பொருட்டாகாது. ஆக, நன்றிசெலுத்துதல் விசுவாசத்திலிருந்து வரும். இப்பேர்பட்ட விசுவாசம் தேவன் பரத்திலிருந்து தருகிற ஆவிக்குரிய விசுவாசமாகும்.

இரண்டு வகையான விசுவாசம் உள்ளன: மாம்சத்திற்குரிய விசுவாசம் மற்றும் ஆவிக்குரிய விசுவாசம் ஆகும். மாம்சத்திற்குரிய விசுவாசத்தோடு மக்கள் தாங்கள் காண்கிற மற்றும் தங்களது சிந்தனைகளோடு ஒத்துப் போகக்கூடியவைகளை மட்டுமே நம்புவார்கள். இருப்பினும், நாம் தேவனுடைய வார்த்தையை இருதயத்திலிருந்து விசுவாசிக்க வேண்டும். அப்போதுதான், நம்மால் கீழ்ப்படிய முடியும். யாக்கோபு 2:26ல் எழுதப்பட்டுள்ளபடி கிரியையில்லாத விசுவாசம் செத்ததாய் கருதப்படும். அப்பேர்பட்ட கிரியைகளில்லாத மாம்சத்திற்குரிய விசுவாசத்தோடு நம்மால் பதில்களையும் ஆசீர்வாதங்களையும் பெற முடியாது. மேலும், அது உங்களை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்தாது. அதனால் நீங்கள் கிரியைகளோடு கூடிய ஆவிக்குரிய விசுவாசத்தை கொண்டிருக்க வேண்டும்.

ஆவிக்குரிய விசுவாசம் தேவனுடைய வார்த்தையை அது உங்கள் அறிவோடும் சிந்தனைகளோடும் ஒத்துப்போகாவிட்டாலும் நம்பச் செய்யும். அப்படி நீங்கள் நம்பியவுடனே அந்த நம்பிக்கை எந்த நிஜமான நிலவரங்களின் கீழும் ஒருபோதும் மாறாது (எபிரெயர் 11:1–2).

கூடுதலாக, இவ்வகையான விசுவாசம் அறிவு மாத்திரமல்ல கிரியைகளோடு கூடிய நிரூபணமாக பின்தொடரும். ஆக, ஆவிக்குரிய விசுவாசத்தோடு மக்கள் ஜெபத்தின்மூலமாக கேட்பவைகள் பார்க்க நடக்க சாத்தியமற்றவைகளாக காணப்பட்டாலும்கூட அவர்களால் பதிலைப் பெற முடியும். ஆவிக்குரிய விசுவாசத்தை பெற நாம் கற்றுக்கொண்ட தேவ வார்த்தைகளுக்கு கிரியைகளில் கீழ்ப்படியக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

நமக்கு ஆவிக்குரிய விசுவாசமிருந்தால், சூழ்நிலைகள் தவறாக சென்றாலும் நம்மால் நன்றி செலுத்த முடியும். நாம் நன்றி செலுத்தும்போது, தேவன் சூழ்நிலைகளை நன்மையானதாக மாற்றி, கைகூடாத காரியங்களை கைகூடவும் கைகூடுகிற காரியங்களை மிகச் சிறப்பாகவும் மாற்றிடுவார். ஆக, நன்றி செலுத்துதல் என்பது தேவனுடைய வார்த்தையில் நம்முடைய விசுவாசத்தின் வெளிப்பாடாகவும், அவர் வார்த்தைக்கு கீழ்ப்படிகிறதன் வெளிப்பாடாகவும் உள்ளது. வேறு வார்த்தையில், தேவ நீதியை நிறைவேற்றுவதில் பரத்திலிருந்து நாம் பதில்களையும் ஆசீர்வாதங்களையும் கீழே கொண்டு வருகிற பாதையாக உள்ளது.

## நன்றி செலுத்துதல், நம்மை நாம் மாற்றிக்கொள்ளக்கூடிய வல்லமை

உண்மையான விசுவாச வாழ்வு என்பது தேவனுடைய வார்த்தையை ஊக்கமாக கற்று அதைக் கேட்டு நம்முடைய இருதயங்களை அதினால் நிரப்புவதாகும். அதாவது, நாம் நம்முடைய இருதயங்களிலிருந்து சத்தியத்திற்கு புறம்பானவைகளை களைந்துப்போட்டு அவைகளுக்குப் பதிலாக அதில் நற்குணத்தையும் அன்பையும் வைக்க வேண்டும். அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப் பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களிலிருந்தும் நம்மைச் சுத்திகரிக்கிறது (1யோவான் 1:5–7).

நம்மால் ஆவிக்குரிய வார்த்தையைக் கேட்க முடிகிறது. மேலும் வேதாகமத்தில் அடங்கியுள்ள தேவனுடைய இரகசியமான அநாதி திட்டத்தால் நாமும் அசைக்கப்படுவதற்காக நாம் நன்றியுள்ளவர்களாய் இருக்கிறோம். சங்கீதம் 119:103ல் உள்ளதுபோல, “உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள்; என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும்” என்று நாமும்கூட அறிக்கை செய்கிறோம். அது புடத்திலிருந்து வெளியே வருகிற சுத்தப்பொன்னைப் போல, அதின் களிம்புகளை நீக்குவதற்கு அக்கினியில் புடமிடப்படுவது போன்றதாய் இருக்கிறது. அதுபோல, எந்த ஒரு கறை திரையும் அல்லது பழுதுமில்லாத சுத்தமும் தூய்மையுமான சத்தியம் நிறைந்த இருதயத்தைக் கொண்டிருப்பதற்கு, நாமும்கூட சில வளர்ச்சி கிரமத்தின் வழியாக கடந்து செல்ல வேண்டும்.

முதலாவது, நாம் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக நம்மில் காணப்படுகிற பாவங்களையும் தீமைகளையும் நாம் கண்டறிந்து, அவைகளை களைந்துப்போட வேண்டும். நாம் பாவத்திற்கு விரோதமாக இரத்தம் சிந்தப்படத்தக்கதாக போராடி இருதயத்திலிருந்து தீமைகளை களைந்துப்போட்டால், நாம் மகிழ்ச்சி நிறைந்த, நன்றி நிறைந்த சந்தோஷமான கிறிஸ்தவ வாழ்வை பரிசுத்த ஆவியின் நிறைவில் வழிநடத்தலாம்.

ஆனால் சில மக்கள் சத்தியத்திற்குப் புறம்பானவைகளை கண்டறியும்போது மனமுடைந்துப்போவார்கள். அவர்கள் தாங்கள் உண்மையுள்ள கிறிஸ்தவ வாழ்வு நடத்திக் கொண்டிருப்பதாக நினைப்பார்கள். ஆனால் அவர்கள் தங்களில் அப்பேர்பட்ட தீமைகள் இருக்கிறது என கண்டறியும்போது, அவர்கள் ஆச்சரியப்படுவார்கள் அல்லது மனமுடைந்துப்போய்விடுவார்கள். நீங்கள் மனமுடைந்ததுபோல உணர்ந்தால், நீங்கள் தீமையை களைந்துப்போடவில்லை என்பதை அது காட்டுகிறது. அதே நேரத்தில் நீங்கள் அது தூக்கி எறியப்பட்டுவிட்டது என்று தவறாக நினைத்ததையும் நிரூபிக்கிறது. அந்த தீமை செயலற்றதாய் மட்டுமே இருந்துள்ளது.

பிலிப்பியர் 4:13ல் வாசிக்கிறோம், “என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு.” நாம் சத்தியத்தில் புதுப்பிக்கப்படும்படிக்கு ஜெபத்தில் கதறி கூப்பிட்டால், தேவன் நம்மீது கிருபையையும் பெலனையும் ஊற்றுவார். பரிசுத்த ஆவியானவரும் நாம் சத்தியத்திற்கு புறம்பானவைகளை களைந்துபோடும்படிக்கு உதவி செய்வார். நீங்கள் அதைரியப்பட்டு விட்டுவிட்டு நன்றி சொல்லத் தவறினால், நீங்கள் ஆவிக்குரிய பெரிய ஆசீர்வாதத்தின் வாய்ப்பை தவற விடுகிறீர்கள். நீங்கள் அதை நன்றிகளுடன் மாத்திரம் மேற்கொள்ளுங்கள்.

1 பேதுரு 1:7 சொல்கிறது, “அழிந்துபோகிற பொன் அக்கினியிலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.” நாம் நம்மிலே தீமையை கண்டறியும்போது நன்றி செலுத்தி நம்பிக்கையில் மகிழ்ச்சியாயிருப்போம். அதினால் மாற்றத்திற்கான கிருபையைப் பெற்று விசுவாசத்தின் கன்மலைமேல் நின்று, ஆவிக்குள்ளாகவும் பூரண ஆவிக்குள்ளாகவும் செல்வோம்.

# "நான் தேவனுடைய ஆசீர்வாதத்தினால் மனை, உள்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து அமைச்சகத்தின் விருதைப் பெற்றுக்கொண்டேன்!"

**கண்காணி ஜேக்யுன் ஜோ, வயது 57, 31வது மாகாணம், மான்மின் தலைமை சபை**



மான்மின் தலைமை சபையில் பங்கு பெறுகிற என் மனைவியை பின்பற்றி நானும் 1997 ஜனவரி மாதத்தில் சபையில் பதிவுசெய்தேன். ஞாயிற்றுக் கிழமைகளில் அடிக்கடி நான் வேலைக்குப் போனதாலும், தொழில் ரீதியாக பயணம் செய்ததாலும் என்னால் ஓய்வுநாளை முழுமையாக கடைப்பிடிக்க இயலவில்லை.

அதைக் குறித்து தேவனிடத்தில் நான் வருத்தப்பட்டேன். அக்டோபர் 2011ல் வெள்ளிக்கிழமை முழு இரவு ஆராதனையில் பங்கு பெறும்படி எனக்காக ஜெபிக்கிற என் மனைவி சொன்னாள். நான் அதை ஏற்று ஆராதனையில் பங்கு பெற்றேன். நான் ஆராதனையில் கண்ணீரோடு துதித்தேன்; பரிசுத்த ஆவியின் அனுபவத்தைப் பெற்றேன். அதுமுதற்கொண்டு, நான் உணவகம் அல்லது சில்லறை வணிக வேலைச் செய்பவர்களுக்கான ஒளியும் உப்பும் குழுவினரின் ஆராதனையில் கலந்து கொண்டு ஓய்வுநாளை ஆசரிக்க துவங்கினேன். ஞாயிறு அன்று வேலை முடிந்த பிறகு அந்த ஆராதனை இரவு 9 மணிக்கு ஏறெடுக்கப்படும்.

இதற்கிடையில், நான் வேலைச் செய்த அதே துறையைச் சார்ந்த வேலை எனக்கு கட்டுமானப் பகுதியில் கிடைத்தது. அதனால் நான் கர்த்தருடைய நாளை ஆசரிக்க முடியும். நான் தசமபாகத்தைக் கொடுக்க ஆரம்பித்த பிறகு, மிகப் பெரியதான பொருளாதார ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டேன். கூடுதலாக, அறிவர். ஜேராக் லீ அவர்களின் வியாதியஸ்தர்களுக்கான ஜெபத்தினால் கடந்த காலத்தில் நடந்த விபத்தினால் விளைந்த முதுகு வலியிலிருந்தும், இறுக்கத்தினால் என் கழுத்தில் உண்டான மரத்த உணர்விலிருந்து முற்றிலும் சுகமானேன். நான் கொடுத்தது கொஞ்சமாக இருந்தாலும் எப்பொழுதும் நமக்கு அதிக ஆசீர்வாதங்களை கொடுக்க விரும்புகிற தேவனை நான் கண்டுகொண்டேன்.

எனக்குள்ளாக கடினமான சுயநீதி மற்றும் சுயதோற்றமான எண்ணங்கள் இருந்ததால், காரணமில்லாத காரியங்களை ஏற்க முடியாதவனாய் இருந்தேன். என் தொழில்துறையில் இந்த குணாதிசயத்தினால் நான் மற்றவர்களால் நன்கு அறியப்பட்டேன். அதை ஒரு வெகுமதியாக நினைத்துகொண்டு என் மனைவியும் மூன்று மகள்களும் என் கருத்துக்களையே பின்பற்ற வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் 2013ல் நான் தானியேல் ஜெபக் கூட்டத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தபொழுது, என்னைச் சுற்றிலும் இருக்கிறவர்களுக்கு அதிக தொல்லைகளை கொடுத்ததை உணர்ந்து, கண்ணீரோடு மனந்திரும்பினேன். நான் அவ்வப்போது "என் பணியாளர்களின் பாதுகாப்பிற்காக நான் கடினமான தொனியோடு வேலை வாங்க வேண்டும்" என்று என்னை நானே நியாயப்படுத்துவேன். ஆனால் நான் முடிவாக தேவசித்தத்திற்கு கீழ்ப்படியாமல் இருந்ததை உணர்ந்துகொண்டேன்.

ஜனவரி 2015ல், ஒரு புதிய கட்டுமான இடத்தில் மேலாளராக நியமிக்கப்பட்டேன். நான் வேலைக்கு முதல் ஆளாக வந்துவிடுவேன். நான் தலைமை போதகருடைய நாள் ஆரம்பிக்கும் ஜெபத்தைப் பெற்ற பிறகு என் வேலையை செய்வேன். நான் மான்மின் விசுவாசியாக நல்லதொரு மாதிரியாக இருக்க முயற்சித்தேன். அநுதினமும் நான் தானியேல் ஜெபக்கூட்டத்தில் ஜெபிப்பேன்.

நான் என் பணியாளர்களை நடத்தும் நடக்கையை மாற்றிக் கொண்டேன். மற்றப் பணியாளர்களுடைய கருத்துக்களை மென்மையாக கேட்டு, அவர்களுடையதை முடிந்தளவிற்கு ஏற்றுக்கொள்ள முயற்சித்தேன். ஆரம்பத்தில் விநோதமாக நினைத்தவர்கள் பிறகு என் இருதயத்தைப் புரிந்து அங்கீகரித்தனர்.

என் மனைவியையும் மகள்களையும் கருத்தில்கொள்ள துவங்கிய பிறகு அவர்கள் தங்களுடைய அநுதின வாழ்க்கையைப் பற்றி என்னிடம் எவ்வித அசௌகரியமுமின்றி பேசத் தொடங்கினர். நாங்கள் வீட்டில் அதிகமாய் சிரிக்க ஆரம்பித்தோம். இந்த வழியில் நான் முயற்சித்ததால், தேவன் தம்முடைய அன்பை நான் உணரச் செய்தார்.

என் கட்டுமானப் பகுதியை சுற்றியுள்ள மற்ற இடங்களில் மழை பெய்தாலும், என் பகுதியில் மழை பெய்யவில்லை. அது கோசேன் நாட்டில் பாதுகாக்கப்பட்டதைப் போன்றதாகும். சில நேரங்களில் மழை கொஞ்சமாக பெய்யும், எனினும் நாங்கள் வேலையை தொடர முடியும். மற்ற சில நேரங்களில் நாங்கள் வேலைகளை முடிந்த பிறகு மழை பெய்யும். ஆகையால் எங்களால் கட்டுமானப் பணிகளை குறித்த நேரத்திற்குள்ளாக முடிக்க முடிந்தது.

மேலும், 2016ம் ஆண்டு சீயோல் மாநகரத்தால் என் கட்டுமானப் பகுதி பாதுகாப்பு நிறைந்த ஆராய்ச்சியில் முதல் தரத்தைப் பெற்றுக்கொண்டது. கட்டுமான தொழிலாளர்களுக்கான நாளான நவம்பர் 22ம் தேதி அன்று நான் மனை, உள்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து அமைச்சரின் பரிசைப் பெற்றுக்கொண்டேன். அல்லேலூயா!



# "என் மூன்று மகன்களும் கேம்ஸ் மற்றும் வன்முறையிலிருந்து விடுதலையானார்கள்!"

**போதகர் லியுஜின்டோ, வயது 41, மலேசியா**

பத்து வருடங்களுக்கு முன்பு நான் ஒரு சபையில் போதகராக என் ஊழியத்தை நடத்திக் கொண்டிருந்தேன். என் கணவரின் மனநிலை கோளாறின்நிமித்தம் என் குடும்ப வாழ்க்கையை நடத்தவும், நான்கு பிள்ளைகளை வளர்க்கவும் சம்பாதிக்க வேண்டியிருந்தது. சபையில் உள்ள ஜனங்களை நினைக்கையில் என்னால் ஊழியத்தையும் விடமுடியவில்லை. என் மூன்று மகன்களும் கணினி விளையாட்டிற்கு (கேம்ஸ்) அடிமையாக இருந்தனர். அதனால் வன்முறையில் ஈடுபட்டு பல்வேறு பிரச்சனைகள் உருவாக காரணமாயினர். நான் ஒரு கஷ்ட காலத்தை அனுபவித்தேன், முடிவில் வாழ்க்கை மீது இருந்த நம்பிக்கையை இழந்துபோனேன்.

இதற்கிடையில், நான் தலைமை போதகரை குறித்தும், மான்மின் தலைமை சபையை குறித்தும் கேள்விப்பட்டேன். நான் மூஜூ என்ற இடத்தில் நடைபெற்ற 2014 ஆம் ஆண்டு மான்மின் கோடை முகாமில் பங்குப்பெற கொரியாவிற்குச் சென்றேன். அறிவர். லீ அவர்கள் ஆத்துமாக்களின் பிரச்சனைகளை தேவனுடைய வல்லமையினால் தீர்ப்பதை பார்த்த பொழுது, காரிருளின் மத்தியில் இறுதியாக வெளிச்சத்தை நான் கண்டுகொண்டதாக உணர்ந்தேன். நான் மிகவும் நன்றி செலுத்தினேன். நான் அவருடைய புத்தகங்களை வாசிக்கவும் GCN–னில் அவரின் பிரசங்கங்களை கேட்கவும் துவங்கினேன். தேவன் மூலமாக என் பிரச்சனைகளுக்கு தீர்வைப் பெற்று விடுவேன் என்னும் விசுவாசத்தை அடைந்தேன்.

என் கணவர் மற்றும் பிள்ளைகளுக்குப் பதிலாக நான் முற்றிலும் மனந்திரும்பி ஆயத்தப்பட்டேன். பிறகு மீண்டுமாக 2015 மான்மின் கோடை முகாமில் பங்குப்பெறுவதற்காக கொரியாவிற்குச் சென்றேன். அறிவர். லீ அவர்கள் என் கணவருடைய பெயரைச் சொல்லி அவருக்காக ஜெபித்தார். என் கணவருடைய அறிகுறிகள் தேற ஆரம்பித்தன. பிறகு அவருக்கு ஊசி தேவைப்படாமல் போயின. என் பிள்ளைகளும் சீக்கிரமாக மாறி, புதிதாக்கப்பட்டார்கள்.



என் முதல் மகன் ஹெக்சியெவோன், வயது 17, கணினி கேம்ஸ் விளையாடுவதை நிறுத்தினான்; அறிவர். லீ அவர்களின் புத்தகங்களை வாசிக்க துவங்கினான். அவன் அவ்வப்போது உபவாசம் இருந்து, பரிசுத்தமாக மாறுவதற்காக முயற்சிக்கிறான். அவன் தானியேல் ஜெபக் கூட்டத்தில் பங்குப்பெற்று, மாணவர்களுக்கு பரிசுத்தமாகுதலின் சுவிசேஷத்தைப் போதிக்க எனக்கு உதவிபுரிகிறான். அறிவர். லீ அவர்கள் உலகளாவிய ஊழியத்தை நிறைவேற்றுவதற்கு உதவியாக இருக்கக்கூடிய ஒரு வேலையாளாக மாறும்படியான நம்பிக்கையைப் பெற்றுள்ளான்.

என் இரண்டாவது பிள்ளை, ஹெக்சியெஷியாங், வயது 16, பல்வேறு தொல்லைகளை கொடுத்து கொண்டிருந்தவனும் மாறினான். அவன் நண்பர்களோடு சண்டைப்போடுவதில்லை. அவனும்கூட கேம்ஸ் விளையாடுவதை நிறுத்திவிட்டு, சபை விசுவாசிகளுக்கு மான்மின் துதிகளை சொல்லிக் கொடுக்கிறான். அவன் தன் உடன்பிறப்புகளை பராமரிக்கிறான்; அவனுடைய மதிப்பெண் தரமும் உயர்ந்துள்ளது. என் மூன்றாவது பிள்ளை ஹெக்சியெயுன், வயது 11, அவனும்கூட கணினி கேம்ஸை நிறுத்திவிட்டான். அவன் துதிக்கிறான், ஜெபிக்கிறான், நன்றாகப் படிக்கிறான். என் கடைசி பிள்ளை ஹெமியின் ஜெபிக்கிறாள்; அவள் நண்பர்களை சபைக்கு வழிநடத்துகிறாள்.

என் ஊழியம் மாறுதலடைந்துள்ளது. நான் என் விசுவாசிகளை GCN (www.gcntv.org) மூலமாக பரிசுத்தமாகுதலின் சுவிசேஷத்தை கற்றுக்கொள்ளும்படி நடத்துவதால், அவர்கள் கிருபையாலும் சத்தியத்தாலும் நிறைந்துள்ளனர். அவர்கள் சந்தோஷத்தைப் புதுப்பித்துக் கொண்டதாக கூறுகின்றனர். என் குடும்பத்தை புதுப்பித்து, என் ஊழியத்தில் மிகப் பெரிய ஆசீர்வாதத்தை எனக்கு கொடுத்த தேவனுக்கு எல்லா நன்றிகளையும் மகிமையையும் செலுத்துகிறேன்.

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com